# முதல் இடைப்பருவத் தேர்வு - 2024

## ஒன்பதாம் வகுப்பு

நேரம்: 1.30 மணி சமூகஅறிவியல் மதிப்பெண்கள்: 50

பிரிவு - I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு:-** 7×1=7

1) மனிதர்களுடன் மரபணுவியல் நோக்கில் மிகவும் நெருக்கமாக இருப்பது

அ) கொரில்லா ஆ) சிம்பன்ஸி

இ) உராங்உட்டான் ஈ) பெருங்குரங்கு

2) சுமேரியன் எழுத்து முறை ______ ஆகும்

அ) பிக்டோகிராபி ஆ) ஹைரோகிளிபிக் இ) சோனாகிராம் ஈ) க்யூனிபார்ம்

3) பாறைக்குழம்பு காணப்படும் அடுக்கு ______

அ) புவி மேலோடு ஆ) கவசம் இ) கருவம் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

4) ______ ஆற்றின் மூப்பு நிலையில் உருவாகும் நிலத்தோற்றம் ஆகும்

அ) துள்ளல் ஆ) வண்டல் விசிறி இ) டெல்டா ஈ) மலை இடுக்கு

5) குடவோலை முறையை பின்பற்றியவர்கள் ______

அ) சேரர்கள் ஆ) பாண்டியர்கள் இ) சோழர்கள் ஈ) களப்பிரர்கள்

6) பொருந்தாத ஒன்றை கண்டறி

அ) சூரிய ஆற்றல் ஆ) காற்று ஆற்றல் இ) காகிதம் ஈ) இயற்கை வாயு

7) சார்க் கூட்டமைப்பின் உறுப்பு நாடுகளில் இல்லாத ஒன்று ______

அ) இந்தியா ஆ) பாகிஸ்தான் இ) சீனா ஈ) பூடான்

பிரிவு - II

**II. குறுகிய விடையளி:- (5 மட்டும்)** 5×2=10

8) பெருங்கற்காலத்தில் இறந்தோரைப் புதைக்கும் வழக்கத்தின் வகைகளை கூறுக

9) எகிப்தியர்கள் கலை கட்டடக் கலையில் திறன்பெற்றவர்கள் விளக்குக.

10) புவியின் உள் அடுக்குகள் யாவை?

11) ஆழிப் பேரலைகள் என்றால் என்ன?

12) வானிலைச் சிதைவு - வரையறு?

13) ஆபிரகாம் லிங்கனின் மக்களாட்சிக்கான வரையறையை கூறுக.

14) பொருளாதார மேம்பாட்டின் குறியீடுகள் என்ன?

15) காலநிலையைப் பாதிக்கும் காரணிகள் யாவை?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பிரிவு - III

**5×5=25**

**III.** விரிவான விடையளி. (5 மட்டும்)

16) மனிதர்களின் வரலாறு பூமியின் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு உடையது - தெளிவுபடுத்துக.

17) கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) பழங்கற்காலத்திற்கும், புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலம் ______ எனப்படும்.

ஆ) ______ என்பது மனிதத் தலையும், சிங்க உடலும் கொண்ட கல்லால் ஆன மிகப்பெரிய உருவம் ஆகும்.

இ) இந்திய அரசியலமைப்பு இறுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆண்டு ______

ஈ) சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ______ ஆவார்.

உ) இந்தியாவில் அதிக கல்வியறிவு பெற்றுள்ள மாநிலம் ______.

18) வளி மண்டலத்தின் அமைப்பைப் பற்றி ஒரு பத்தியில் எழுதுக.

19) வேறுபடுத்துக.

அ) கருவம் மற்றும் மேலோடு

ஆ) டெல்டா மற்றும் ஓதபொங்குமுகம்

இ) காரணம் கூறு:-

பாறைகளை அனைத்து திசைகளிலும் அரிக்கும் தன்மை காற்றுக்கு உண்டு

20) நிலத்தடி நீரின் அரித்தலால் உண்டாகும் நிலத்தோற்றங்களை விவரி?

21) இந்தியாவில் மக்களாட்சிப் பற்றி உங்களது கருத்து என்ன?

22) இந்தியாவின் சுற்றுச்சூழல் கொள்கைகளைப் பற்றி விளக்கமாக விவரிக்கவும்.

## பிரிவு - IV

**IV.** கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி:- **1×8=8**

23) அ) சிந்துவெளி நாகரீகத்தின் மறைந்த பொக்கிஷங்களைப் பற்றி எழுதுக.

(அல்லது)

ஆ) புவி அமைப்பை விவரி?

24) உலக வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றை குறிக்கவும்.

அ) சீனா
ஆ) எகிப்து
இ) மெசபடோமியா
ஈ) பசுபிக் நெருப்பு வளையம்
உ) புவி அதிர்ச்சி மண்டலம்
ஊ) இமயமலைத்தொடர்
எ) சுண்ணாம்பு பிரதேச பகுதி
ஏ) குளிர் பாலைவனம்

********